**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.40/2013**

**06.03.2026. அ.சா.1 ரமேஷ் த/பெ. மன்னார்**

A1 to 3 present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் வீட்டிற்கு எதிரே மன்னார்பாளையம் – பெரியகல்லாப்பட்டு செல்லும் சாலை இருக்கிறதா என்றால் இல்லை. ஏரிதான் உள்ளது. என் வீட்டிற்கும் எதிரிகள் வீட்டிற்கும் இடையே சுமார் 30 அடி தூரம் இருக்குமமா என்று கேட்டால் 200 அடி தூரம் இருக்கும். நான், என் மனைவி, என் தம்பி , அவரது குடும்பம் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரி வளர்மதியின் கைப்பேசி எண்ணை எனது தம்பி வெங்கடேசன் என்பவர் சின்னத்தம்பி என்பவரிடம் கொடுத்ததால்தான் இந்த சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. நான் சின்னதம்பி என்பவரிடம் சென்று அதைப்பற்றி எதுவும் விசாரிக்கவில்லை. என் தம்பியை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து செல்வதற்கு முன் காவல் நிலையத்தில் சம்பவத்தை பற்றி சொல்லிவிட்டுதான் சென்றேன் என்றால் சரியல்ல. நான் புகார் மனு மதியம் 3.30 மணிக்கு கொடுத்தேன். என்னுடன் காவல் நிலையத்திற்கு யாரும் வரவில்லை. புகார் கொடுத்த மறுநாள் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அந்த புகார் மனுவை நான்தான் எழுதினேன். எந்தவொரு நபரும் தன் உடன்பிறந்த தம்பி இறந்தபிறகு தன் கைப்பட புகாரை எழுதும் மனநிலையில் இருக்கமாட்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 13.06.2012 அன்று மதியம் என் நிலத்தில் நான் மின்மோட்டார் போட்டு பாசனம் செய்துகொண்டிருந்தபோது எதிரி வீராசாமி என்னிடம் அங்கு வந்து என் தம்பியை பற்றி பேசியதும் அவரை கண்டிக்கமாட்டாயா என்று கேட்டது சம்மந்தமாக என் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் என் அம்மா என்னுடன் இருந்ததாக சொல்லியுள்ளேன். என் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் 2வது எதிரி வீராசாமி முதல் எதிரி ராஜாமணியிடம்" அவனை அடித்து கொல்லுடா " என்று சொன்னார் என்று சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லாமல் தற்போது முன்னுக்குபின்

புறனாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சண்டையை தடுக்க சென்றபோது எதிரி வீராசாமி என்னை அடித்து தள்ளினார் என்று என் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் தம்பியை எதிரிகள் அடித்த பிறகு நான் என் வீட்டிற்கு எதிரே உள்ள வெங்கடேசன் என்பவரை அழைத்தேன் என்றும் அப்போது என் தம்பி ரத்த வாந்தி எடுததார் என்றும் என் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆரம்ப சுகாதார நிலையத்தில் என் தம்பியை கையாலும் செங்கல்லாலும் தாக்கியதால் காயம் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் நான்தான் சொன்னேன். காயம்பட்ட என் தம்பியை நான் தூக்கியபோது நான் அணிந்திருந்த உடையில் ரத்தக்கறை படிந்திருந்ததா என்றால் நான் தூக்கவில்லை. வெங்கடேசனும் ஆட்டோக்கரரும்தான் தூக்கினார்கள். அவர்கள் ஆடையில் ரத்தக்கறை படிந்திருந்ததை நான் பார்த்தேன். மேற்படி விவரத்தை நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். நான் அரசு பேருந்தில் நடத்துனராக 17 ஆண்டுகளாக வேலை செய்துவருகிறேன். என் பணிக்கு வருகைப்பதிவேடு உண்டு. நான் விடுப்பு எடுக்கவேண்டும் என்றால் மேலாளருக்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்றால் திடீரென விடுப்பு எடுத்தால் அனுப்புவதில்லை. மறுநாள் பணிக்கு சென்ற பிறகு கொடுப்பது வழக்கம். 13.06.2012 அன்று நான் பணியில் இருந்தேன் என்றால் இல்லை. நான் 13.06.2012 உட்பட 3 நாட்கள் விடுப்பில் இருந்தேன். அந்த 3 நாட்கள்விடுப்பிற்கு எங்கள் மேல் அதிகாரிக்கு விடுப்பு விண்ணம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. பின்னர் 2 நாட்கள் கழித்து வேலைக்கு சென்றபோது கொடுத்தேன். என் தம்பி வெங்கடேசனுக்கு எதிரிகளுக்கு பக்கத்து வீட்டில் இருந்த ஒரு பெண்ணுடன் தகாத உறவு இருந்தது என்று சொன்னால் நான் மறுக்கிறேன். அதன்காரணமாக எனக்கும் என் தம்பிக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் இல்லை. நானும் என் தயாரும் என் தம்பியை கட்டாயப்படுத்தி அம்பிகா என்ற பெண்ணுடன் திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. அவரும் திருமணத்திற்கு சம்மதித்தார். திருமணம் ஆன நாள்முதல் என் தம்பி மன உளைச்சலுக்கு ஆளாகி இருந்தார் என்றால் சரியல்ல. என் தம்பியை நாங்கள் கட்டாயப்படுத்தி திருமணம் செய்ததால் அவர் வேறு பெண்ணுடன்

தகாத உறவில் இருந்ததை நான் கண்டித்து சண்டை போட்டதாலும் அவர் மனஅழுத்தத்தில் இருந்ததால் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி வீராசாமி என் மனைவியின் அக்காவின் கணவர் என்றால் சரிதான். என் முதல் மனைவி சாந்திக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். சாந்தி 2ம் எதிரி வீராசாமிக்கு மச்சினிச்சி முறை என்றால் சரிதான். சாந்திக்கு குழந்தை இல்லை என்பதால் அவரை நான் அடித்ததால் அதை பற்றி எதிரி வீராசாமி என்னிடம் வந்து கேட்டதால் எங்களுக்குள் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. என் தம்பியின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் எதிரியின் குடுமபத்தின் மீது இருந்த முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,
Tiruvannamalai.